**JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU**

**CC No. 88/2017**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW -16/PW- 16 |
| Name | : திரு. தாமரைசெல்வன் |
| Father/Husband's Name | : தனராஜன் |
| Village | : நெ.13/23, மத்திய கிழ சாலை |
| Taluk | : மகாகவி பாரதி நகர், சென்னை 39 |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 63 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.02.2026.

A1, A2 present.

**முதல் விசாரணை–**

நான் தற்போது சென்னையில் வசித்து வருகிறேன். நான் தடய அறிவியல் துறையில் 35 ஆண்டுகள் பணிபுரிந்து கடந்த 29.07.2022 அன்று பணி நிறைவு செய்து ஓய்வில் உள்ளேன். நான் ஆவண பிரிவில் பணியிலிருந்த போது இந்த நீதிமன்றத்திலிருந்து குற்ற எண்.1/2015 சிபிசிஐடி காஞ்சிபுரம் சம்மந்தப்பட்ட ஆவணங்கள் ஆவண ஆய்விற்காக 22.07.2016 அன்று காவலர் 35719 திரு.சரவணன் அவர்கள் மூலமாக நீதிமன்ற முத்திரையிடப்பட்ட கவரை பெறப்பட்டது. அதில் கீழ் கண்ட ஆவணங்கள் இருந்தது.

பட்டா எண்.585 ஆர்பிடி எண்.3224/2000 அதிலுள்ள கையெழுத்துகளுக்கு Q1 என்று குறியீடு செய்தேன். அதிலுள்ள தலைமையிடத்து துணை வட்டாட்சியர், தாம்பரம் என்ற முத்திரையின் மேலுள்ள கையொப்பத்திற்கு Q3 என குறியீடு செய்தேன். அதே ஆவணத்திலுள்ள மற்றொரு கையொப்பத்திற்கு Q5 என குறியீடு செய்தேன்.

பட்டா எண்.585 ஆர்பிடி எண்.3326/2000 ஆவணத்திலுள்ள கையொப்பங்களுக்கு Q2 என குறியீடு செய்தேன். அந்த ஆவணத்திலுள்ள தலைமையிடத்து துணை வட்டாட்சியர், தாம்பரம் என்று முத்திரையின் மேலுள்ள கையெழுத்திற்கு Q4 என குறியீடு செய்தேன். அதே ஆவணத்திலுள்ள மற்றொரு கையொப்பத்திற்கு Q6 என குறியீடு செய்தேன். ஒப்புகொள்ளப்பட்ட பதிவேடு எண்.14 மேலும் D16 என்று குறியீடு செய்யப்பட்டது. அதிலுள்ள ஒப்புக்கொள்ளப்பட்ட கையெழுத்துகளுக்கு A1 முதல் A7 வரை குறியீடு செய்தேன். பதிவேடு 15 D17 என்று குறியீடு செய்யப்பட்டது. அதிலுள்ள கையெழுத்துகளுக்கு A18 என்று குறியீடு செய்தேன்.

ஆர்பிடி 4350/2000 D3 என்று கோப்பிலுள்ள கையெழுத்திற்கு A9 என்று குறியீடு செய்தேன். D4 என்று கோப்பிலுள்ள கையெழுத்திற்கு A10 என்று குறியீடு செய்தேன். D5 என்று கோப்பிலுள்ள கையெழுத்திற்கு A11 என்று குறியீடு செய்தேன். D6 என்று கோப்பிலுள்ள கையெழுத்திற்கு A12 என்று குறியீடு செய்தேன். D7 என்று கோப்பிலுள்ள கையெழுத்திற்கு A13 என்று குறியீடு செய்தேன். D8 என்று கோப்பிலுள்ள கையெழுத்திற்கு A14 என்று குறியீடு செய்தேன். D9 என்று கோப்பிலுள்ள கையெழுத்திற்கு A15 என்று குறியீடு செய்தேன். D10 என்று கோப்பிலுள்ள கையெழுத்திற்கு A16 என்று குறியீடு செய்தேன். D12 என்று கோப்பிலுள்ள கையெழுத்திற்கு A17 என்று குறியீடு செய்தேன். D13 என்று கோப்பிலுள்ள கையெழுத்திற்கு A18 என்று குறியீடு செய்தேன். D11 என்று கோப்பிலுள்ள கையெழுத்திற்கு A19, A20 என்று குறியீடு செய்தேன். D14 என்று கோப்பிலுள்ள கையெழுத்திற்கு A21 என்று குறியீடு செய்தேன். D15 என்று கோப்பிலுள்ள கையெழுத்திற்கு A22 மற்றும் A24 என்று குறியீடு செய்தேன்.

நான் நீதிமன்றம் அனுப்பிய கையெழுத்துகளையும், கையொப்பங்களையும் கவனமுடன் ஆய்வு செய்து அறிக்கை அனுப்பியுள்ளேன். சர்ச்சைக்குரிய Q1, Q2 என்ற கையெழுத்துகளையும், A1 முதல் A8 வரை உள்ள கையெழுத்துகளையும், கையெழுதது குணாதிசியங்கள் கொண்டு ஆய்வு செய்ததில் இவை அனைத்தும் ஒரே நபரால் எழுதப்பட்டது என்று அறிக்கை அளித்துள்ளேன். அதற்கான காரணங்களையும் ஆய்வு அறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள காரணத்தாளில் தெளிவாக குறிப்பிட்டுள்ளேன்.

சர்ச்சைக்குரிய Q3, Q4 கையொப்பங்களையும், ஒப்புக்கொள்ளப்பட்ட

ஆவணத்திலுள்ள A9 முதல் A18 வரையுள்ள (தலைமையிடத்து துணை வட்டாட்சியர் அவர்களின் கையொப்பங்கள்) கையொப்பங்களையும் ஆய்வு செய்ததில் அவை அனைத்தும் ஒரே நபரால் போடப்பட்டுள்ளது என்று அறிக்கை அளித்துள்ளேன். அதற்கான காரணங்களையும் ஆய்வு அறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள காரணத்தாளில் தெளிவாக குறிப்பிட்டுள்ளேன்.

சர்ச்சைக்குரிய Q6 என்ற கையெழுத்துகளையும், ஒப்புக்கொள்ளப்பட்ட A19 முதல் A24 வரை உள்ள கையெழுத்துகளையும், கையெழுத்து குணாதிசியங்கள் கொண்டு ஆய்வு செய்ததில் இவை அனைத்தும் ஒரே நபரால் எழுதப்பட்டது என்று அறிக்கை அளித்துள்ளேன். அதற்கான காரணங்களையும் ஆய்வு அறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள காரணத்தாளில் தெளிவாக குறிப்பிட்டுள்ளேன்.

சர்ச்சைக்குரிய Q5 என்ற கையொப்பத்திற்கு கருத்துரை வழங்க இயலவில்லையென்று அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன். இந்த ஆய்வை நானும், எனது துணை இயக்குநர் திரு.எம்.டி.யுவனேஷன் என்பவரும் சேர்ந்து ஆய்வு செய்து அறிக்கை தயார் செய்து ஆவண எண்.167/2016 நாள்.18.10.2016 தேதியிட்டு நீதிமன்றம் அனுப்பிய ஆவணங்களையும் எங்கள் ஆய்வறிக்கை மற்றும் காரணத்தாளையும் மூடி முத்திரையிடப்பட்ட கவரில் வைத்து தங்களுக்கு அனுப்பி வைத்தேன். <u>**நான் தயார் செய்து அனுப்பிய ஆய்வறிக்கை மற்றும் கடிதம் அதசாஆ 22 (4 தாள்கள்) ஆக குறியீடு செய்யப்படுகிறது.**</u> போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லையென தெரிவிக்கப்பட்டது.**

**2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –**

என்னிடம் ஆய்விற்காக அனுப்பப்பட்ட பட்டாக்கள் அசலா அல்லது போலியானது என்பதை ஆய்வு செய்ய எந்தவிதமான கோரிக்கையும் எனக்கு அனுப்பப்படவில்லை என்றால் சரிதான். வருவாய் துறையினரால் அளிக்கப்பட்ட அசல் பட்டா எனது ஆய்விற்கு அனுப்பப்பட்டதா என்றால் இல்லை. நீதிமன்றம் மூலமாக புலன் விசாரணை அதிகாரி அனுப்பிய ஆவணங்களில் Q1, A1 என குறியீடு செய்து அனுப்பினாரா என்றால் ஆம். நான் எந்த ஆவணத்தையும் சரிவர பரிசீலனை செய்யவில்லையென்று சொன்னாலும், தவறான அறிக்கை கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. சர்ச்சைக்குரிய கையெயெழுத்துகளும், ஒப்புக்கொள்ளப்பட்ட

கையெழுத்துகளும் ஆய்வு செய்து தான் அறிக்கை அளிக்கவேண்டும் என்று சொன்னால் சரிதான். சந்தேகத்திற்குரிய நபரிடமிருந்து கையொப்பம் எடுத்து எனக்கு ஆய்விற்கு அனுப்பப்பட்டதா என்றால் இல்லை. நான் அளித்த அறிக்கை செல்லாது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.xxx V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.